**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்கள்**: 284,311,323,312,322,321/**மா/2023**

நாள்: **24.11.2023**

1)திருமதி. காளியம்மாள்,
த/பெ. திரு. வீராச்சாமி, திண்டுக்கல்.
(மு.ம.எண்.284/மா/2023)
2)திருமதி. காளியம்மாள்,
க/பெ. திரு. R. மூக்கன், திண்டுக்கல்.
(மு.ம.எண்.311/மா/2023)
3)திரு.A.மாரியப்பன், திண்டுக்கல்.
(மு.ம.எண்.323/மா/2023) – முறையீட்டு மனுதாரர்கள்
4)திரு. வேலுச்சாமி, திண்டுக்கல்.
(மு.ம.எண். 312/மா/2023)
5)திரு.T.மாரியப்பன், திண்டுக்கல்.
(மு.ம.எண்.322/மா/2023)
6)திருமதி.செல்லம்மாள், திண்டுக்கல்.
(மு.ம.எண்.321/மா/2023)

ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல், நெட்டுத்தெரு, முனிசிபல் காலனி என்கிற முகவரியில் வசிக்கும் (1) திருமதி. காளியம்மாள் த/பெ.வீராச்சாமி, (2) திருமதி. காளியம்மாள், க/பெ. R.மூக்கன்; முனிசிபல் காலனி, நெட்டுத்தெரு, 1–A என்கிற முகவரியில் வசிக்கும் (3) திரு.A. மாரியப்பன்; செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத்தெருவில் வசிக்கும் (4)திரு.வேலுச்சாமி; முனிசிபல்காலனி, நெட்டுத்தெரு, கதவுஎண்.19ல் வசிக்கும் (5)திரு.T.மாரியப்பன் மற்றும் செல்லாண்டியம்மன்கோவில் வடக்குத்தெருவில் வசிக்கும் (6)திருமதி.செல்லம்மாள் என்பவர்கள் முறையே 20.08.2023, 08.10.2023, 08.10.2023, 21.09.2023, 09.10.2023, மற்றும் 09.10.2023 என நாளிட்டு அனுப்பிய மனுக்கள் 30.08.2023, 09.10.2013, 09.10.2023, 10.10.2023, 10.10.2023 மற்றும் 09.10.2023 நாட்களில் இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டு முறையே, 284/மா/2023, 311/மா/2023, 323/மா/2023, 312/மா/2023, 322/மா/2023, மற்றும் 321/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுக்களாக பதிவு செய்யப்பட்டன. மேற்கண்ட மனுதாரர்களது மனுக்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற

நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல், நெட்டுத்தெரு, முனிசிபல் காலனி என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. காளியம்மாள், முனிசிபல் காலனி, நெட்டுத்தெரு, 1–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு.A. மாரியப்பன், செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெருவில் வசிக்கும் திரு. வேலுச்சாமி, முனிசிபல் காலனி, நெட்டுத்தெரு, கதவு எண்.19ல் வசிக்கும் திரு.T.மாரியப்பன் மற்றும் செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத் தெருவில் வசிக்கும் திருமதி. செல்லம்மாள் என்பவர்கள் முறையே 20.08.2023, 08.10.2023, 08.10.2023, 21.09.2023, 09.10.2023, மற்றும் 09.10.2023 என நாளிட்ட முறையீட்டு மனுக்களில் கீழ்க்கண்டவாறு தங்களது புகார்களை தெரிவித்துள்ளார்கள்.

திருமதி.காளியம்மாள் தனக்கு வழங்கப்பட வேண்டிய 2000 முதல் 2015 வரையிலான சேமநலநிதி வட்டித்தொகை மற்றும் தனது கணவரின் வாரிசு என்ற முறையில் அவருக்கு 2000 முதல் 2011 வரை உள்ள சேமநலநிதி வட்டித்தொகையையும், திரு.A.மாரியப்பன் தனது தந்தைக்கு 2000 முதல் 2007 வரை வழங்கப்பட வேண்டிய சேமநலநிதி வட்டித்தொகையையும், திரு.வேலுச்சாமி 2000 முதல் 2015 வரை வரவேண்டிய சேமநலநிதி வட்டித்தொகையையும், திரு.T.மாரியப்பன் 2000 முதல் 2013 வரை தனக்கு வரவேண்டிய சேமநலநிதி வட்டித்தொகையையும் மற்றும் திருமதி.செல்லம்மாள் தனது கணவருக்கு 2000 முதல் 2011 வரை வரவேண்டிய சேமநலநிதி வட்டித்தொகையையும் பெற்றுத்தருமாறு கோரியுள்ளார்கள்.

**2) மேற்கண்ட புகார் மனுக்களின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்புகள் மூலம் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.11.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர்கள் திருமதி.காளியம்மாள் த/பெ. வீராச்சாமி; திருமதி.காளியம்மாள் க/பெ. R.மூக்கன்; திரு. வேலுச்சாமி; திரு.T. மாரியப்பன் மற்றும் திருமதி. செல்லம்மாள் ஆகியோர் தங்களுக்கு சேமநலநிதி வட்டி நிலுவைத்தொகை திண்டுக்கல் மாநகராட்சியால் வழங்கப்பட்டு விட்டது எனவும், தங்களுக்கு வயதாகி விட்டதால் நேரடி விசாரணைக்கு வர இயலவில்லை என தொலைபேசி மூலம் தெரிவித்துள்ள நிலையில், 6 மனுதாரர்களில் ஒருவரான திரு. A. மாரியப்பன் என்பவர் 20.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார்;

" எனது தந்தை அழகர் என்பவர் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி 2007ல் ஓய்வு பெற்றார். அதே காலத்தில் அவருடன் பணியாற்றிய திரு.பழனிசாமி மற்றும் பெருமாள் ஆகியோரும் எனது தந்தையுடன் பணியாற்றி 2007ல் ஓய்வு பெற்றனர். எனது தந்தைக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டி நிலுவைத் தொகையாக ரூபாய் 10,000/– மட்டுமே திண்டுக்கல் மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், எனது தந்தையுடன் பணியாற்றிய மேற்கண்ட இருவருக்கும் வழங்கப்பட்ட பொது வருங்கால வைப்பு நிதி வட்டி நிலுவைத் தொகை கூடுதலாக மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, எனது

தந்தையுடன் பணியாற்றிய மேற்கண்ட இருவருக்கும் அளிக்கப்பட்ட P.F. வட்டி நிலுவைத் தொகையைப் போன்றே எனது தந்தைக்கும் P.F. வட்டி நிலுவைத் தொகை வழங்கிட ஆவண செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாக அலுவலர் **20.11.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற கீழ்க்கண்ட 6 பணியாளர்களுக்கும், அவர்களுக்கு சேரவேண்டிய பொது வருங்கால வைப்பு நிதி வட்டி நிலுவைத் தொகை திண்டுக்கல் மாநகராட்சியால் பின்வருமாறு அளிக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்து அது தொடர்பான கணக்குத்தாள் மற்றும் விவரங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

| வ. எண். | பணியாளரின் பெயர் | பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாள் | நிலுவைத் தொகை | தொகை வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | V.காளியம்மாள் த/பெ.வீராசாமி | 31.07.2015 | 24,667/– | 1.11.2023 |
| 2. | R.மூக்கன் ம/பெ.காளியம்மாள் | 25.12.2011 | 5,331/– | 1.11.2023 |
| 3. | பிச்சைபெருமாள் ம/பெ.செல்லம்மாள் | 30.06.2009 | 1,148/– | 1.11.2023 |
| 4. | க.வேலுச்சாமி | 30.06.2019 | 50,913/– | 1.11.2023 |
| 5. | T.மாரியப்பன் | 30.06.2013 | 16,850/– | 1.11.2023 |
| 6. | அழகர் | 30.06.2007 | 10,771/– | 1.11.2023 |

மேற்கண்ட வரிசை எண் 4ல் கண்டுள்ள வேலுச்சாமி என்பவர் மாநகராட்சியில் நீண்ட காலமாக பணியாற்றி கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர்தான் அதாவது 30.06.2019ல் ஓய்வு பெற்றதாலும் அவருடைய PF தொகையிலிருந்து தனியரால் பணம் அதிகமுறை எடுக்காததாலும் அவருக்கான PF தொகை உயர்ந்துள்ள காரணத்தால் அவருக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகையும் அதிகமாக உள்ளது. இது தொடர்பான விவரங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அன்னாருக்கு சேரவேண்டிய பொது வருங்கால வைப்புநிதி நிலுவைத் தொகையில் மேற்கண்ட 50,913/–ஐ தவிர்த்து மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூ.19,000/– அடுத்த தவணையாக ஒரு வார காலத்தில் மாநகராட்சியால் வழங்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் 15.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 15.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

" உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரக உதவி இயக்குநரின் செயல்முறை உத்தரவில் திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுகளுக்கு கடந்த 2000–01 முதல் 2015–16 வரையிலான காலங்களில் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பொது வருங்கால வைப்பு நிதிக்குரிய வட்டித்தொகை ரூ. 68,97,101/– திண்டுக்கல் மாநகராட்சிக்கு விடுவித்து உத்தரவிடப்பட்டதைத்தொடர்ந்து திண்டுக்கல் மாவட்ட கருவூலத்தால் திண்டுக்கல் மாநகராட்சிக்கு கடந்த 02.12.2022 அன்று ஈடு செய்யப்பட்டது.

திரு.மாரியப்பனின் தந்தை 30.06.2007ல் ஓய்வு பெற்றதை தொடர்ந்து 2000 முதல் 2007 காலத்திற்குரிய வட்டித்தொகை ரூ.10,771/– Online IFHRMS வழியாக Union Bank of India/Dindigul வங்கி கணக்கு எண். 520101017654145–ல் வரவு வைக்கப்பட்டுவிட்டது என்ற விவரமும் நடுவத்தின் உத்தரவு முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்து இதுபோன்றே மற்ற மனுதாரர்களுக்கும் அவர்களது வங்கி கணக்கில் பொது வருங்கால வைப்பு நிதி வட்டித்தொகை வரவு வைக்கப்பட்டு விட்டது என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனுக்கள் மற்றும் திரு. A.மாரியப்பனின் வாக்குமூலம், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாக அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

இந்நேர்வில் 3 மனுதாரர்கள் தங்களுக்கும் மற்றும் 3 மனுதாரர்கள் வாரிசுதாரர் என்ற வகையிலும் திண்டுக்கல் மாநகராட்சியில் பணியாற்றிய காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பொது வருங்கால வைப்பு நிதிக்கு வட்டி நிலுவைத் தொகை வழங்கப்படாததால் அதனை பெற்றுத்தருமாறு கோரியுள்ளார்கள்.

6 மனுதாரர்களில் ஒருவரான திரு.A.மாரியப்பன் தனது வாக்குமூலத்தில் தனது தந்தைக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டி நிலுவைத் தொகையாக ரூபாய் 10,000/– மட்டுமே திண்டுக்கல் மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தனது தந்தையுடன் பணியாற்றிய திரு. பழனிச்சாமி மற்றும் பெருமாள் இருவருக்கும் வழங்கப்பட்ட பொது வருங்கால வைப்பு நிதி வட்டி நிலுவைத் தொகை கூடுதலாக மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, தனது தந்தையுடன் பணியாற்றிய மேற்கண்ட இருவருக்கும் அளிக்கப்பட்ட P.F. வட்டி நிலுவைத் தொகையைப் போன்றே தனது தந்தைக்கும் P.F. வட்டி நிலுவைத் தொகை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாக அலுவலர் தனது வாக்குமூலத்தில் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப்பணியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற 6 பணியாளர்களுக்கும் அவர்களுக்கு சேரவேண்டிய பொது வருங்கால வைப்பு நிதி வட்டி நிலுவைத் தொகை திண்டுக்கல் மாநகராட்சியால் அளிக்கப்பட்டுவிட்டது என தெரிவித்து அது தொடர்பான கணக்குத்தாள் மற்றும் விவரங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

திரு.வேலுச்சாமி என்பவர் மாநகராட்சியில் நீண்ட காலமாக பணியாற்றி 30.06.2019ல் ஓய்வு பெற்றதாலும் அவருடைய PF தொகையிலிருந்து தனியரால் பணம் அதிகமுறை எடுக்காததாலும் அவருக்கான PF தொகை உயர்ந்துள்ள காரணத்தால் அவருக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகையும் அதிகமாக உள்ளது. அன்னாருக்கு சேரவேண்டிய

பொது வருங்கால வைப்புநிதி நிலுவைத் தொகையில் மேற்கண்ட 50,913/—ஐ தவிர்த்து மீதமுள்ள நிலுவைத் தொகையான ரூபாய் 19,000/— அடுத்த தவணையாக ஒரு வார காலத்தில் மாநகராட்சியால் வழங்கப்படும் என்பதையும் நிர்வாக அலுவலர் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும் எல்லா மனுதாரர்களுக்கும் அவர்களுக்கு சேர வேண்டிய பொது வருங்கால வைப்பு நிதி வட்டித்தொகை அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ள விவரத்தை திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்தும் மனுதாரர்களுடன் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் மூலமும் அறிய முடிகிறது.

மேலும் திரு க. வேலுச்சாமி என்பவருக்கு திண்டுக்கல் மாநகராட்சி நிர்வாக அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு ஒரு வார காலத்திற்குள் மீதமுள்ள பொது வருங்கால வைப்பு நிதி வட்டி நிலுவைத் தொகையான ரூ.19,000/—த்தை விரைந்து வழங்கிட இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. இதில் எவ்வித தாமதமும் இருக்கக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது.

6 பணியாளர்களிடமிருந்து இம்முறைமன்ற நடுவத்தால் புகார் மனுக்கள் பெறப்பட்ட பின்னரே, திண்டுக்கல் மாநகராட்சி கடந்த 01.11.2023 அன்று மேற்கண்ட மனுதாரர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கியுள்ளது. இந்தத்தூய்மைப் பணியாளர்கள் முறைமன்ற நடுவத்தை நாடுவதற்கு முன்னதாகவே அவர்களுக்கு உரிய பணப்பயன்களை வழங்கியிருந்தால் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாவண்ணம் தடுத்திருக்க முடியும். எனவே இனி வரும் காலங்களில் இது போன்ற தவறுகள் நிகழ்ந்திடாவண்ணம் உரிய காலத்தில் பொது வருங்கால வைப்பு நிதி வட்டித்தொகையை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திருமதி. காளியம்மாள்,
த/பெ. திரு. வீராச்சாமி,
நெட்டுத்தெரு,
முனிசிபல் காலனி,
திண்டுக்கல்—624 001.

2)திரு. A. மாரியப்பன்,
த/பெ. திரு.அழகர்,
1—A, நெட்டுத்தெரு,
முனிசிபல் காலனி,
திண்டுக்கல்—624 001.

3)திரு க. வேலுச்சாமி,
த/பெ. திரு.கந்தசாமி,
செல்லாண்டியம்மன் கோவில் வடக்குதெரு,
திண்டுக்கல் – 624 001.

4)திரு. T. மாரியப்பன்,
த/பெ. திரு. திருப்பதி,
நெட்டுத்தெரு,
முனிசிபல் காலனி,
திண்டுக்கல் – 624 001.

5)திருமதி. பி. செல்லம்மாள்,
க/பெ. திரு. பிச்சை,
செல்லாண்டியம்மன் கோவில் வடக்குத்தெரு,
திண்டுக்கல் – 624 001.

6)ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

7)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

8)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்